ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1652/39 - 2010 මැයි 05 වැනි බදාදා - 2010.05.05
*1652/39 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் ஹப்புத்தளை நகர சபையின் துணைத்தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

*துணைத்தவிசாளர், தவிசாளராக நியமிக்கப்பட்டதன் காரணமாக ஹப்புத்தளை நகர சபையின் துணைத்தவிசாளர் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;*

*ஹப்புத்தளை நகர சபையின் தவிசாளர் ரசீட்கான் மொஹொமட் அஸ்வர் கான் என்பவர், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத்தவிசாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படவேண்டியவருமான ஹப்புத்தளை நகர சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டார் ஆதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. லமாஹேவாகே சம்பத் குமார லமாஹேவா என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது ஹப்புத்தளை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. லமாஹேவாகே சம்பத் குமார லமாஹேவா என்பவர், ஹப்புத்தளை நகர சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஏ. ஏ. சீ. என். தலங்கம,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*ஹப்புத்தளை நகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*பதுளை,*
*2010, ஏப்பிறல் 22.*

*5 - 446*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*